


**10. 10. 2025**

தலைப்பு செய்திகள்

1. **பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** அடுத்தமாதம் 6-ம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

2. **நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி, சென்ற நிதியாண்டு** ஒருலட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்து உள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

3. **சர்வதேச தரத்திலான வரி கட்டமைப்பு முறையை** உறுதி செய்வதன் அவசியத்தை நித்திஆயோக் வலியுறுத்தியுள்ளது.

4. **தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நாளை** கிராம சபை கூட்டங்கள் நடைபெறுகின்றன.

5. **புதுதில்லியில் வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான 2-வது இறுதி** டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா நிதானமாக விளையாடி வருகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

**பீஹார் தேர்தல்**

**பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** அடுத்தமாதம் 6-ம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டதை தொடர்ந்து வேட்புமனு தாக்கல் தொடங்கியது.

வரும் 17-ம் வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

2-ம் கட்ட தேர்தல் அடுத்தமாதம் 11-ம் தேதி நடைபெறும்.

வாக்குகள் அடுத்தமாதம் 14-ம் தேதி எண்ணப்படுகின்றன.

இதனிடையே பீஹாரில் தொகுதி பங்கீடு குறித்து பி.ஜே.பி. தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான திரு. தர்மேந்திர பிரதான் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களுடன் இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

அதேபோல் ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் திரு.லாலுபிரசாத் யாதவுடன் காங்கிஸ் கட்சி தொகுதி பங்கீடு குறித்து விவாதிக்கின்றது.

❖❖❖❖❖❖❖

**ராஜ்நாத் சிங்**

**நாட்டின் உற்பத்தி துறை பல்வேறு** சீர்த்திருத்தங்களுடன் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் கூடிய முன்னேற்றப் பாதையில் பயணிப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய நாட்டின் சிட்னி நகரில், இந்தியா, ஆஸ்திரேலியா பாதுகாப்பு வர்த்தக வட்டமேஜை நிகழ்வில் இன்று உரையாற்றியஅவர், கொள்கைகளையும், நடைமுறைகளையும் தொடர்ந்து எளிமைப்படுத்தியதால் பாதுகாப்பு தளவாட உற்பத்தி இந்தியாவில் மேம்பட்டதாக குறிப்பிட்டார்.

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி 18 சதவிகிதம் அதிகரித்து, ஒருலட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு சென்ற நிதியாண்டு உயர்ந்ததாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

கப்பல் கட்டமைப்பு திறன்களுடன், உற்பத்தி சார்ந்த அடித்தளத்துடனும், தனியார் மற்றும் ஸ்டார்ட்அப் துறைகளில் படைப்பாற்றல் திறனாளர்களுடனும் நம்தேசம் நம்பகத் தன்மையுடைய நட்புறவு நாடாக திகழ்வதாக சுட்டிக்காட்டினார்.

முதலீடுகளுக்கு உகந்த சூழல் நம்நாட்டில் நிலவுவதால் ஆஸ்திரேலியாவில் உள்ள வர்த்தக சமூகம் இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் இணைந்து மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப தளத்தை கட்டமைக்க முடியும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும்** எதிர்கொள்ள ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

டெல்லி ஹைதராபாத் இல்லத்தில் ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் **மௌலாவி அமீர்கான் முட்டக்குடன்** இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்ட அமைச்சர், வளர்ச்சி மற்றும் வளம் சார்ந்த பாதையில் இருநாடுகளும் செல்ல விரும்புவதை எடுத்துரைத்தார்.

ஆப்கானிஸ்தானின் மேம்பாட்டில் இந்தியாவிற்கு தனி அக்கறை இருப்பதாக கூறியஅவர், அதன் இறையாண்மை, எல்லை பாதுகாப்பு, சுதந்திரத்திற்கு இந்தியா முழுமையாக ஆதரவு தெரிவிப்பதாக கூறினார்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறைகளை முன்னெடுத்து செல்ல இருநாடுகளின் விருப்பதை எடுத்துரைத்த டாக்டர் எஸ். ஜெய்சங்கர், காபூல் மற்றும் புதுதில்லி இடையே கூடுதல் விமானப்போக்குவரத்து தொடங்கப்பட இருப்பது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

சுரங்கத்துறையில் அகழாய்வு பணிக்கான வாய்ப்புகளுக்கு ஆப்கானிஸ்தான் விடுத்த அழைப்பிற்கு நன்றி தெரிவித்த அமைச்சர் இதுகுறித்து ஆலோசிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

**நித்தி ஆயோக்**

**சர்வதேச தரத்திலான வரி கட்டமைப்பு முறையை** உறுதிசெய்வதன் அவசியத்தை நித்தி ஆயோக் முதன்மை நிர்வாக இயக்குநர் திரு. பி.பி.ஆர். சுப்ரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வரி சார்ந்த கொள்கை நடைமுறைகள் குறித்த அறிக்கையை இன்று வெளியிட்டு பேசிய அவர், நுகர்வோருக்கு உகந்த இலகுவான நடைமுறைகளை கொண்டதாக இது அமையவேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

திரு. சுப்ரமணியன் இன்று வெளியிட்ட வரி சார்ந்த அறிக்கையில் வருமான வரி வழக்குகள் விசாரணை குறித்த நெறிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**சென்னை கொளத்தூரில் வண்ண மீன்கள் வர்த்தக** மையத்தை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நாளை திறந்துவைக்கிறார்.

53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 184 கடைகளுடன் உணவகம், குடிநீர், கழிப்பிடம், வானங்கள் நிறுத்துவதற்கான இடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இந்த வர்த்தக மையம் திறக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**கிராமசபை கூட்டம்**

**தமிழகம் முழுவதும் கிராமசபை கூட்டம் நாளை** நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் காணொலி மூலம் உரையாற்றவுள்ளார்.

மாநிலம் முழுவதும் 10 ஆயிரம் கிராம பஞ்சாயத்துகளில் முதலமைச்சரின் உரையை நேரடியாக ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழக கூடுதல் தலைமை செயலாளர்
திரு. ககன் தீப்சிங் பேடி தெரிவித்துள்ளார்.

குக்கிராமங்கள், சாலைகள் மற்றும் தெருக்களில் சாதிப்பெயர்களை நீக்குதல், மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள், டெங்கு காய்ச்சலை தடுத்தல் உள்ளிட்டவை தொடர்பாக இக்கூட்டங்களில் விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖

**உலக மனநல தினம்**

**உலக மனநல தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.**

மனநல சேவை தொடர்பான செயல்பாடுகளை ஊக்குவிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் அவசியத்தை மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மனநலத்தை பேணுவது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நெல்லையிலிருந்து, தூத்துக்குடிக்கு மனநலம் சார்ந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று தொடங்கியது.

மனநலத்தை பேணுவதன் அவசியம் குறித்து தஞ்சை மனநல மருத்துவர் **உஷாநந்தினி** எமது செய்திப்பிரிவிடம் தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

பேரிடர் மற்றும் அவசர நிலைகளில் மனநல சேவைக்கு அணுகுதல் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு மனநல தினம் கடைபிடிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**மா.சு.**

**ரத்ததானம் செய்வதில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதாக** மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஓமாந்தூரார் மருத்துவமனையில் ரத்த தான முகாமை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், மாநிலத்தில் 101 ரத்ததான மையங்கள் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**அறிவிப்பாணை**

**தமிழ்நாட்டில் ஆயிரத்து 450 கிராம ஊராட்சி செயலர்களை** நிரப்புவதற்கான அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

இன்றுமுதல் tnrd.tn.gov.in இணையதளத்தில் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

கிராம ஊராட்சி செயலர்களை நிரப்ப டிசம்பர் மாதம் நேர்காணல் நடத்தி அம்மாதமே பணி நியமன ஆணை வழங்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

**உலக முட்டை தினம்**

**உலக முட்டை தினம் இன்று கடைபிடிக்கப்** படுகிறது.

நாமக்கல் மண்டலத்தில் நாள்தோறும் 5 கோடிக்கும் அதிகமான முட்டைகள் உற்பத்தி செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**தஞ்சை சங்கமம்**

**தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையம்** சார்பில் தஞ்சை சங்கமம், நம்மஊரு திருவிழா நாளையும், நாளைமறுநாளும் நடைபெறவுள்ளதாக இதன் உதவி இயக்குநர் திரு.ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**தீயணைப்புத்துறை**

**தீ பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே** ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களை தீயணைப்பு நிலையத்திற்கு வரவழைத்து அத்தியாவசிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துரைக்கும் நிகழ்வு நாளை நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி மாநிலம் முழுவதும் 375 தீயணைப்பு நிலையங்களில் நாளை மற்றும் நாளைமறுநாள் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எந்தவொரு கட்டணமோ, முன்பதிவோ செய்யவேண்டியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**திருவள்ளூர் மாவட்டத்தில் பிரதமரின் உணவு** பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறுதொழில் நிறுவனத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் இன்று திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**திருப்பூர் மாவட்டத்தில் பிரதம மந்திரியின் கல்வி** உதவித்தொகை பெற இளம் சாதனையாளர்கள் வரும் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மனீஷ்நரவனே தெரிவித்துள்ளார்

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராம ஊராட்சி** செயலர் காலிப்பணியிடங்கள் இன சுழற்சி மூலம் பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

**தமிழகம் முழுவதும் பொதுவிநியோக** திட்ட குறைதீர்முகாம் நாளை நடைபெறுகிறது.

குடும்ப அட்டைகளில் பெயர்சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை இதில் மேற்கொள்ளலாம்.

**நாகை மாவட்டத்தில் அகவை முதிர்ந்த** தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

**ராணிப்பேட்டை மாவட்டத்தில் வன உயிரின** வாரவிழாவை ஒட்டி பள்ளி கல்லூரி மாணாக்கருக்கான ஓவியம், பேச்சு போட்டிகள் நடைபெற்றன.

**தர்மபுரி மாவட்டத்தில் விபத்தில்லா தீபாவளியை** பொதுமக்கள் கொண்டாட வலியுறுத்தி தீயணைப்பு துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**தென்காசியில் புகையில்லா இளைய சமுதாயம் தொடர்பான** விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு. கமல்கிஷோர் இன்று துவக்கி வைத்தார்.

முன்னதாக ஆட்சித்தலைவர் தலைமையில் மாணவ மாணவிகள் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்றனர்.

❖❖❖❖❖❖❖

**கோவில்**

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி** திருக்கோவில் கந்தசஷ்டி பெருவிழா வரும் 22-ம் தேதி தொடங்குகிறது.

முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வரும் 27-ம் தேதியும், திருக்கல்யாணம் 28-ம் தேதியும் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**புதுதில்லியில் வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான 2-வது இறுதி** டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

முதல் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில், சற்றுமுன் 1 விக்கெட் இழப்பிற்கு 207 ரன் எடுத்திருந்தது.

கே.எல். ராகுல் 38 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் 106 ரன்னுடனும்,

சாய் சுதர்சன் 63 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖